தேர்வுகள் /அவசரம்

விழுப்புரம் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் :15251 /ஆ1/ 2012 நாள் : 18.10.2012

பொருள் : மேல்நிலைத் தேர்வு, மார்ச் 2013–பள்ளி மாணவர்களின் விவரங்கள் அடங்கிய பெயர்பட்டியல் தயாரித்தல் – தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறை வழங்குதல் – சார்பு.

பார்வை : 1) சென்னை–6,அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண் : 32982/எச்1/2012 நாள் : 17.10.2012

நடைபெறவுள்ள மார்ச் 2013 மேல்நிலைப்பொதுத்தேர்வெழுதும் பள்ளி மாணவர்களின் பெயர்பட்டியல் (Nominal Roll) தயாரிப்பது தொடர்பாக பின்வரும் கால அட்டவணையும், அறிவுறைகளும் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பெயர்பட்டியல் தயாரிப்பதற்கான கால அட்டவணை

வ. எண்	பணியின் விபரம்	ஒப்படைக்க வேண்டிய நாள்
1	மாணவர் விபரம் அடங்கிய உறுதிமொழிப்படிவத்தை மாணவர் மற்றும் பெற்றோரிடமிருந்து பெற வேண்டிய நாள்	25 –10–2012 வியாழக் கிழமை காலை 9.00 மணி
2	தலைமையாசிரியர் உறுதிமொழி படிவங்களை (NR) மையத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்	29 –10–2012 திங்கள் கிழமை காலை 9.00 மணி
3	கணினியில் பதிவு செய்த பெயர் பட்டியலினை(Check List) NR மையத்திலிருந்து தலைமை ஆசிரியர்கள் பெற்றுச்செல்ல வேண்டிய நாள்	07-11–2012 புதன் கிழமை காலை 9.00 மணி
4	திருத்தங்கள் செய்யப்பட்ட பெயர்பட்டியலை தலைமையாசிரியர்கள் திரும்ப NR மையத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்	09 –11–2012 வெள்ளிக் கிழமை காலை 9.00 மணி
5	பிழை நீக்கப்பட்ட பெயர் பட்டியலினை தலைமையாசிரியர்கள் திரும்ப NR மையத்தில் பெற்றுச் செல்ல வேண்டிய நாள்	15–11–2012 வியாழக் கிழமை காலை 9.00 மணி
6	இறுதி திருத்தத்தை தலைமை ஆசிரியர்கள் மேற்கொண்டு திரும்ப NR மையத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்	17 –11–2012 சனிக் கிழமை மாலை 5.00 மணிக்குள் கட்டாயம் ஒப்படைத்தல் வேண்டும்

அனைத்து மாணவர்களின் உறுதி மொழிப்படிவங்களிலும் (Declaration Form), தலைமையாசிரியர்கள் தனிக்கவனம் செலுத்தி ஒருமுறைக்கு, இருமுறை அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொண்டு தலைமை ஆசிரியர்கள் இப்படிவத்தில் கையொப்பம் இட வேண்டும். பெயர்பட்டியல் மற்றும் மதிப்பெண் சான்றிதழ் இதன் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுவதால் இப்பணியை தலைமையாசிரியர் மிகுந்த பொறுப்புடனும், கவனத்துடனும் செய்ய வேண்டும். இதற்குப் பின்னர் எவ்விதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது என திட்டவட்டமாக அறிவிக்கப்படுகிறது.

மாணவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுச்சான்றிதழ் ஆகியவற்றின் அடிப்படையிலேயே உறுதி மொழிப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

உறுதி மொழிப்படிவங்களை துளையிட்டு (Upper Left Corner) ஒவ்வொரு பாடத்தொகுப்பினையும் தனித்தனி கட்டுகளாக கட்டி கீழ்கானும் படிவத்தை பூர்ததி செய்து ஒப்படைக்க வேண்டும்.

(உ.ம்) பாடத்தொகுப்பு எண். 101ல் தமிழ்வழி பயிலும் மாணவர்கள் பட்டியலை தனியாகவும், ஆங்கில வழி பயிலும் மாணவர்கள் பட்டியலை தனியாகவும் கட்டி ஒப்படைக்க வேண்டும்.

புதியதாக தற்பொழுது 12 ஆம் வகுப்பு எழுதும் பள்ளியாக இருப்பின் 10 ஆம் வகுப்பு தேர்வுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பள்ளி எண்ணை குறிப்பிட வேண்டும்.

1. உறுதிமொழிப்படிவங்களில் சரியான பெயர் / தலைப்பெழுத்து, பிறந்த தேதி, தேர்வெழுதும் பாடங்கள் மற்றும் பயிற்று மொழி ஆகியவை பூர்த்தி செய்யப்பட வேண்டும். பெயர் மற்றும் பிறந்த தேதி 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான மதிப்பெண் சான்றிதழில் உள்ளது போலவே குறிப்பிடப்பட வேண்டும்.

2. அனைத்து மாணவர்களின் உறுதிமொழிப்படிவங்களிலும், தலைமைஆசிரியர் தனிக்கவனம் செலுத்தி ஒரு முறைக்கு இருமுறை அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என்பதனை உறுதி செய்து கொண்டு தலைமை ஆசிரியரும் இப்படிவத்தில் கையொப்பமிட வேண்டும். பெயர்பட்டியல் மற்றும் மதிப்பெண் சான்றிதழ் இதன் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுவதால், இப்பணியை தலைமைஆசிரியர் மிகுந்த பொறுப்புடனும், கவனத்துடனும் செய்ய வேண்டும். இதற்கு பின்னர் எவ்விதமான திருத்தங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இதன் பின்பும் இதில் ஏதும் தவறு நேரிடின் சம்மந்தப்பட்ட தலைமைஆசிரியரே இதற்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதுடன், தலைமையாசிரியர் மீது துறை நடவடிக்கையும் எடுக்க நேரிடும் என்பதையும் தலைமையாசிரியரிடம் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு, பெறப்படும் படிவங்களில் உள்ள விவரங்கள் அனைத்தும் சேர்க்கைப் பதிவேட்டில் (Admission Register) உள்ள விவரங்களுடன் சரியாக உள்ளனவா என்பதை சரிபார்த்து, விவரங்களை சரிபார்த்தவர் மாணவர்களின் படிவங்களில் கையொப்பமிட வேண்டும். இந்த விவரங்களின் அடிப்படையில்தான் தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் அனுப்பப்படும் என்பதாலும், மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் என்பதாலும், இதில் ஏற்படும் தவறு மாணவரை பெரிதும் பாதிக்க வாய்ப்புள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. N.R Print Out ஐ பெற்றுக்கொண்ட தலைமையாசிரியர், அதில் உள்ள விவரங்களை – மாணவரின் பிறந்த தேதி, தலைப்பெழுத்து, பெயரில் உள்ள எழுத்துக்கள் (Spelling) பாடத்தொகுப்பு எண், பயிற்று மொழி அம்மாணவர் அளித்த உறுதி மொழிப்படிவத்துடன் ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும். இவ்விவரங்களில் ஏதும் தவறுகள் இருந்தால் N.R Print Out ல் உரிய திருத்தங்கள் செய்து அதனை மீண்டும் N.R மையத்தில் வப்படைக்க வேண்டும்.

4. கடந்த மார்ச் 2012 மேல்நிலைத் தேர்வுக்கு பள்ளி மாணவர்களிடமிருந்து அவர்தம் பெயர் / பிறந்த தேதி போன்ற இதர விவரங்கள் குறித்த உறுதிமொழிப் படிவம் பெறப்பட்டு அதன்படி பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. எனினும் மார்ச் 2012 தேர்வுக்கு மாணவ / மாணவிகளின் பெயர் தலைப்பெழுத்து (Initials) மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் மேற்கொள்ள ஏராளமான முறையீடுகள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது. இவ்வாறான தவறுகள் முற்றிலும் தவிர்க்கப்பட தலைமை ஆசிரியர்கள் கவனமாக செயல்பட வேண்டும் என பலமுறை அறிவுரைகள் அனுப்பியிருந்தும் சான்றிதழ் வழங்கப்பட்டபின் திருத்தம் கோரி அதிக அளவில் இது தொடர்பாக முறையீடுகள் பெறப்படுவது வருத்தத்திற்குரிய செயல் என்பதை தலைமை ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

மாணவர்களின் உறுதி மொழிப்படிவத்தை ஒப்படைக்க வேண்டிய இடம்

1	விழுப்புரம் கல்வி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து வகை மேல்நிலைப்பள்ளிகள்	அரசு மேல்நிலைப்பள்ளி, (கணினி அறை) விழுப்புரம்	29 –10–2012 திங்கள் கிழமை காலை 9.00 மணி
2	திண்டிவனம் கல்வி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து வகை மேல்நிலைப்பள்ளிகள்	புனித அன்னாள் மேல் நிலைப்பள்ளி (கணினி அறை) திண்டிவனம்	29–10–2012 திங்கள் கிழமை காலை 9.00 மணி

இச்செயல்முறைக்கடிதம் மற்றும் உறுதிமொழிப்படிவம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி, தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்–க. முனுசாமி
முதன்மைக்கல்வி அலுவலர்
விழுப்புரம்

இணைப்பு–
உறுதிமொழிப்படிவம் (Declaration Form)

பெறுநர் – அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி
தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள்

நகல்–மாவட்டக்கல்வி அலுவலர், விழுப்புரம் / திண்டிவனம், மேற்காண் மையத்தை பார்வையிட்டு அறிக்கையினை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
நகல்–சென்னை–6, அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

படிவம் – 1

கல்வி மாவட்டம் | | |

தேர்வுமைய எண் | | | | |

பள்ளிஎண் | | | | |

பள்ளியின் பெயர் :

தொலைபேசி எண் :

தலைமையாசிரியர் பெயர் :

தலைமையாசிரியர் தொலைபேசி எண் :

பள்ளி அமைந்துள்ள பகுதி | 01. URBAN | 02. RURAL |

பள்ளிநிர்வாகம் (√) :

03-GOVT	04-CORP	05- MPL	06-TOWN-SHIP,CONTON	07-ADW
08-KALLAR	09-SW	10-DEAF&DUMP	11- FOREST	12- OTHERS
13-AIDED	14-SELF FINANCE	15-MATRIC	16-AI	17-OTHR BOARD

பள்ளியின் வகை | 18 - BOYS | 19 - GIRLS | 20 - CO-ED |

வ. எண்	பாடத்தொகுப்பு எண் (GroupCode)	பயிற்று மொழி (Medium)	மாணவர்களின் எண்ணிக்கை		
			ஆண்	பெண்	மொத்தம்
1					
2					
3					
4					
5					
6					
மொத்தம்					

தலைமையாசிரியர் / முதல்வர் கையொப்பம்

படிவம் –2

கல்வி மாவட்ட எண் ☐☐

மைய எண் ☐☐☐☐

பள்ளியின் பெயர் :

பள்ளியின் எண் ☐☐☐☐

தொலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
(**STD Code** உடன்)

தலைமை ஆசிரியர் பெயர் :

தலைமை ஆசிரியர் செல்லுமிட பேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

உதவித் தலைமை ஆசிரியர்: செல்லுமிட பேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

பாடத்தொகுப்பு எண் : ☐☐☐

மாணவர் எண்ணிக்கை :

ஆண்கள்	பெண்கள்	மொத்தம்

இத்தொகுப்பின் கீழ் உள்ள விருப்பப்பாடங்கள்	மொழி வழி (**Medium of Answering**) (பொருத்தமானவற்றை **TICK** செய்க)
1.	தமிழ்வழி / ஆங்கில வழி
2.	தமிழ்வழி / ஆங்கில வழி
3.	தமிழ்வழி / ஆங்கில வழி
4.	தமிழ்வழி / ஆங்கில வழி

தலைமைஆசிரியர் கையொப்பம்

படிவம் –3

HIGHER SECONDARY EXAMINATION, MARCH-2013

DECLARATIONS FORM FOR THE REGULAR CANDIDATES

1. NAME OF THE CANDIDATE (In Capital Letters)

2. SEX

M	F

3. COMMUNITY

SC	SCA	ST	SS	MBC	BC	BCM	OC
Scheduled Caste	Scheduled Caste Aruntnathiar	Scheduled Tribe	Scheduled Caste Christains	Most Backward Class	Backward Class	Backward Class Muslim	All other Communities & Nationalities

4. DATE OF BIRTH

Day		Month		Year	

5. RELIGION

H-HINDU	**M**-MUSLIM	**C**-CHRISTION	**O**-OTHERS

6. PHYSICALLY CHALLENGED

H-HANDICAPPED	**B**-BLIND	**D**-DEAF&DUMP

7. GROUP CODE

8. SUBJECTS UNDER PART **I, II & III**

	NAME OF THE LANGUAGE/SUBJECT	CODE NO		MEDIUM
		THEORY	AURAL & ORAL / PRACTICAL	
PART **I** LANGUAGE				
PART **II** ENGLISH				
PART **III** SUBJECTS1				
2				
3				
4				

1. நான் **20** ஆம் ஆண்டு மாதம் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் _____ பதிவெண் கொண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெற்றுள்ளேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.
2. வரிசை எண் 1மற்றும் 4இல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் என்னுடைய பத்தாம் வகுப்பு (SSLC) சான்றிதழில் பதியப்பட்டுள்ளபடி, உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கிறேன். மேலும் எதிர்காலத்தில் மேற்கண்ட விவரங்களில் மாற்றம் ஏதும் கோரமாட்டேன் எனவும் உறுதியளிக்கிறேன்.
3. வரிசை எண் 8இல் குறிப்பிட்டுள்ள மொழிப்பாடம் மற்றும் இதர பாடங்களின் விவரங்கள் அனைத்தும் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும் உறுதியளிக்கிறேன்.

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்
SIGNATURE OF THE PARENT/GUARDIAN

மாணவர் கையொப்பம்
SIGNATURE OF THECANDIDATE

வகுப்பாசிரியர் கையொப்பம்
SIGNATURE OF THE CLASS TEACHER

பள்ளித்தலைமையாசிரியர்/முதல்வர் கையொப்பம் (பள்ளி முத்திரையுடன்)
SIGNATURE OF THE HEADMASTER/ PRINCIPAL WITH SCHOOL SEAL

<u>கவனத்திற்கு</u>

படிவம் – 1 ஐ. பூர்த்தி செய்து COVERING LETTER உடன் இணைத்து அனுப்பவேண்டும்.

படிவம் – 2 ஐ. ஒவ்வொரு GROUP CODE கட்டுடன் இணைத்து பூர்த்தி செய்து அனுப்பவேண்டும்.

படிவம் – 3 ஐ. ஒவ்வொரு மாணவனுக்கும் இரு நகல் தந்து கவனமாக பூர்த்தி செய்து திரும்பபெற்று GROPUP CODE WISE அடுக்கி தனித்தனியே தைத்து மேற்கூரிய படிவங்களுடன் ஒரு செட் NR மையத்தில் ஒப்படைக்கவேண்டும்

DECLARATION படிவத்தில் மாணவனின்பெயர் SSLC மதிப்பெண் பட்டியலில் உள்ளவாறு இருத்தல் வேண்டும்.

*** படிவங்களில் ஏற்படும் தவறுகளுக்கு அப்பள்ளி தலைமை ஆசிரியரே பொறுப்பாவர். எனவே கவணமாக படிவத்தை தயார் செய்து அனுப்பவும்.